
# திராவிடத்தால் வாழ்கிறோம்

897

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

---

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

19

திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.

# பணம் : வரதட்சணைக்கு எதிரான சுயமரியாதைப் பெண்கள்!

'பணம்' படத்தில் மூன்று ஜோடிகள் மூலம், மூன்று விதமான வாழ்க்கை, சிந்தனை முறைகள் அவர்களுக்கிடையிலான உரை யாடல்கள் என அந்த காலகட்ட அரசியலை விமர்சனம் செய்திருப்பார் கலைஞர்.

கருப்புச் சட்டைக்காரராக வரும் துரை (என்.எஸ்.கிருஷ்ணன்) திருக்குறளில் கூறியுள்ளபடி வாழவேண்டும் எனப் பிரச்சாரம் செய்பவராக இருப்பார். அவர் தனது வாழ்க்கைத் துணையை, தானே காதலித்துத் தேர்வு செய்யவும் முயற்சி செய்வார். அவருக்கு ஜோடியாக வரும் நல்லம்மா (டி.ஏ.மதுரம்) ஒருபடி மேலே சிந்திப்பவராக, செயல்படுபவராக, துரையின் தவறுகளையும் சுட்டிக்காட்டித் திருத்தும் பெண்ணாகவும் வருவார். அதாவது சுயமரியாதை உணர்வுடைய பெண்கள் தங்களது துன்பத்தை எதிர்த்துப் போராடுபவர்களாகவும் பழமைக் கண்ணோட்ட முடைய பெண்கள் தங்களது வாழ்க்கையை ஆணாதிக்கத்திற்குப் பலியாக்கி துன்பத்தில் சிக்கிச் சீரழிவதாகவும் காட்சிப்படுத்தப் பட்டுள்ளதைக் காண்கிறோம்.

### ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதியா?

உதாரணமாக இந்த உரையாடலைக் காணலாம்; நல்லம்மாவைத் திருமணம் செய்துகொள்ள விரும்பும் துரை, அதுதொடர்பாக நல்லாம்மாவிடம் பேசும் காட்சியில், அவள் திருமண வாழ்க்கை குறித்து, சொந்தமாக முடிவெடுக்கும் திறன் கொண்டவராகப் படைத்திருப்பதைக் குறிப்பிடலாம்.

"நாம ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிட்டு வாழ்ந்தா நம்ம வாழ்க்கை எப்படி இருக்கும் தெரியுமா? ஸ்டெதஸ்கோப்பும் காதும் போல, நோயாளியும் மருந்தும் போல, அரசியல்வாதியும் அந்தர்பல்டியும் போல..." என்று நகைச்சுவையுடன் துரை சொல்லிக் கொண்டிருக்கையில், நல்லம்மா... "ஆம்பள எப்படி வேணும்னாலும் நடப்பான்" என்றும், 'ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதி' என்றும் தனது வாதத்தைப் பாடலாகப் பாடுவார்.

"நீ ஆயிரமாயிரம் சாத்திரம் படித்தும் அறிவே இல்லையா? சற்றேனும் அறிவே இல்லையா? என நல்லம்மா பாடும்போது வெட்கிப்போய் துரை கைகளால், தனது முகத்தை மூடிக்கொள்வான்.

மற்றொரு காட்சியில்...

**துரை:** உனக்கு இந்தக் கல்யாண சபலம் வந்திருக்கா?

**நல்லம்மா:** வந்திருக்கு, ஆனா வேற தினுசல.

**துரை:** எப்படி?

**நல்லம்மா:** நம்ம நாட்டுல ஒரு படிச்ச மாப்பிள்ளைக்குப் பொண்ணக் கொடுக்கிறதுனா ஐயாயிரம், பத்தாயிரம் கேட்கிறாங்க. அந்த வழக்கத்தை நான் மாத்தி வச்சிடப்போறேன்.

**துரை:** கண்டிப்பா மாத்தியாகணும், நானும் கூட சேர்றேன் அதுல.

**நல்லம்மா :** நீ நினைக்கிறது மாதிரி இல்ல. படிச்ச மாப்பிள்ளைக்கு ஒரு பொண்ணைக் கொடுக்க, பணம் கேட்கிறாங்கல்ல அதே மாதிரி படிச்ச பொண்ணுக்கு மாப்பிள்ளை வீட்டுல இருந்து பணம் கொடுக்கணும்

**துரை:** அப்பிடின்னா?

**நல்லம்மா:** நா படிச்சிருக்கேன், கொஞ்சம் வைத்தியத் தொழிலும் தெரியும், அதுனால என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறதுனா நீ எனக்குப் பணம் கொடுக்கணும்.

**துரை:** எவ்வளவு?

**நல்லம்மா:** டூ தௌசண்ட் (Two thousand)

**துரை:** டூ தௌசண்ட்? ஓ! மை காட் (Two thousand? Oh My God) ரெண்டாயிரத்துக்கு நான் எங்க போவேன்? என்று காட்சி அமைக்கப்பட்டிருக்கிறது. அதாவது அன்றைய காலகட்டத்தில் நிலவிய வரதட்சணை எனும் கொடுமை, அநீதி என்பதை, பெண் கதாபாத்திரம் மூலமே மக்களுக்குப் புரியவைத்தன 'பணம்' படமும் கலைஞரின் திரைக்கதை வசனமும்.

### சீர்திருத்த சமூகம் கொண்டாடும்!

இதைப்போலவே கதாநாயகன் உமாபதிக்கும் சுந்தரத்திற்கும் இடையிலான உரையாடல் காட்சியிலும் கலைஞர் தனது முத்திரையைப் பதித்துள்ளதைக் காண்கிறோம்.

உமாபதி தனது மனைவி நடத்தைக் கெட்டவள் என நம்பி வாழ்க்கையை வெறுத்து, தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொள்ளப் போகிறான். அப்போது அங்கு சுந்தரம் வருகிறான்.

**சுந்தரம் :** சாவுக்குக் காவியம் பாடும் நீ யாரப்பா?

**உமாபதி:** மரணத்தைப் பற்றி ஒரு முடிவுக்கு வந்த மாவீரனுமல்ல, மகானுமல்ல மனம் தகர்ந்துபோன சாதாரண மனிதன்.

**சுந்தரம்:** சுற்றி வளைக்காதே.

**உமாபதி:** சுருக்கமாகவே சொல்லி விடுகிறேன். சூன்யமாகிவிட்டது வாழ்வு.

**சுந்தரம்:** வாழ்வல்ல, உன் அறிவு என்று சொல். தற்கொலையை விட கோழைத்தனம் வேறொன்றுமில்லை

**உமாபதி:** உண்மைதான். ஆனால், இதைத் தவிர வேறு வழிகாண முடியாதவன்.

**சுந்தரம்:** பைத்தியக்காரா, எவ்வளவோ பெரிய கொள்கைகளுக்காக எத்தனையோ பேர் செத்திருக்கிறார்கள். விஷத்தைக் கையிலேந்தி வீரத்தை நெஞ்சிலேந்திய சாக்ரட்டீஸ், அடிமைத் தளையை அறுத்தெறிந்த ஆப்ரகாம் லிங்கன், மதவெறி எதிர்த்த மகாத்மா காந்தி, திருப்பூர் மண்ணிலே ரத்தத்தை மழையெனக் கொட்டிய தீரன் திராவிடக் குமரன், 'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை என்னை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை' எனப் பண்பாடி உயிர்விட்ட தரணிப் புகழ் தாளமுத்து, நடராசன் இவர்களெல்லாம் செத்திருக்கிறார்கள் அவனியிலே அணையாத புகழ் விளக்குகளாய். ம்...

நீயும்தான் சாகத் துணிகிறாய், சாதாரண சங்கடம் ஒன்றைச் சுமக்க முடியாமல்... என்று புத்தி புகட்டி அனுப்புவதாக இக்காட்சி அமைக்கப்பட்டிருக்கிறது. இன்றைய நாயக வழிபாட்டுத் திரைப்படங்களுக்கு மத்தியில் வாழும் நம்மால் கதாநாயகனுக்கு நண்பனும், வீட்டு வேலைக்காரனும் புத்தி சொல்லித் திருத்தும்விதமாக கலைஞரால் எழுதப் பட்ட இப்படிப்பட்ட வசனங்களையும், காட்சிகளையும் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

இதே போல ஜமீன்தாரின் மகளான கோமதி கதாபாத்திரமும் மிகச் சிறப்பாகப் படைக்கப்பட்டிருக்கும். அவள் அநியாயத்தை உடனுக்குடன் தட்டிக் கேட்பதுடன் தனது உரிமைகளுக்காகப் போராடச் செய்பவளாகவும்., கட்டாயமாகத் தனக்குச் செய்து வைக்கப் பட்ட திருமண பந்தத்திலிருந்து விடுபடுவதற்காகப் போராடக் கூடியவளாகவும் இருக்கிறாள்.

இவ்வாறான நல்லம்மா, கோமதி என இருவேறு வகைப்பட்ட பாத்திரப் படைப்பின் மூலமாக பெண்களுக்குக் கல்வியும் சுயமரியாதை உணர்வுமே சுகவாழ்வை அளிக்கும் என்பதை ஆணித்தரமாக எடுத்துச் சொன்ன படமாக 1952-இல் புரட்சி செய்தது 'பணம்'.

...காட்சி விரியும்

படங்கள் உதவி : ஞானம்





> பெண்களுக்குக் கல்வியும் சுயமரியாதை உணர்வுமே சுகவாழ்வை அளிக்கும் என்பதை ஆணித்தரமாக எடுத்துச் சொன்ன படமாக 1952-இல் புரட்சி செய்தது 'பணம்'.

---

## விளம்பர மாடல் அம்பலமாகிறது!

நீட், ஜே.இ.இ. போன்ற நுழைவுத்தேர்வுகளுக்குச் செல்லும் மாணவ-மாணவிகளின் ஆடைகளைக் களைந்து, அணிகலன்களை அகற்றி, தாலியைக் கழற்றச் சொல்லி மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாக்கி அனுப்பி வைப்பது ஒன்றிய அரசுத் தேர்வுத் துறைகளின் வாடிக்கையாக உள்ளது. இந்தப் போக்கை மாற்ற, எந்த முயற்சியும் எடுக்காத ஒன்றிய அரசு, இன்னொரு பக்கம் பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களுக்குப் பதற்றத்தைக் குறைக்கிறோம் என 'பரிக்ஷா பே சர்ச்சா' என்ற நிகழ்ச்சியை ஆண்டுதோறும் நடத்திக்கொண்டிருக்கிறது.

பிரதமர் பங்கேற்கும் இந்த நிகழ்ச்சி, 2018-இல் தொடங்கப்பட்ட போது, அதன் செலவு 3.67 கோடி ரூபாய். ஆனால், 2025-இல் 18.82 கோடியாக செலவு அதிகரித்துவிட்டது. கடைசி 2 ஆண்டுகளாக இந்நிகழ்ச்சிக்காக நாடு முழுவதும் 1,111 இடங்களில் பிரதமர் மோடி படத்துடன் செல்ஃபி பாயின்ட் வைப்பதற்காகவே பெரும் தொகையைச் செலவிட்டிருக்கிறார்கள். வீண் விளம்பரத்திற்காக செலவுக்கணக்கைக் கூட்டிக்கொண்டே இருப்பதாக விமர்சனங்கள் எழுந்திருக்கின்றன. மாணவர்களுக்கான பயனுள்ள திட்டங்களுக்கு நிதியைக் குறைத்துக்கொண்டே செல்லும் மோடி அரசு, தனக்கான விளம்பரம் என்றால், செலவைக் கூட்டிக்கொள்கிறது என்பதுதான் இதில் எழுந்திருக்கும் விவாதம்.

1963-இல் இருந்து தேசிய திறனறித் தேர்வு நடத்தப்பட்டு, தேர்வாகும் பத்தாம் வகுப்பு மாணவர்கள் 2,000 பேருக்கு மாதாந்திர உதவித்தொகையும், மேல்படிப்புக்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வந்தன. ஆனால், 2021-இல் இருந்து அத்தேர்வு நடத்தப்படவில்லை. பிரதம மந்திரி புதுமைக் கற்றல் திட்டத்திற்கான நிதி 23% குறைக்கப்பட்டுவிட்டது. சிறுபான்மையினருக்கான மவுலானா ஆசாத் உதவித்தொகைத் திட்டத்தில் ஆராய்ச்சிப் படிப்புகளுக்கு வழங்கப்படும் நிதி 6 மாதமாக கிடைக்கவில்லை. தாழ்த்தப்பட்டோர் வெளிநாட்டிற்குச் சென்று படிப்பதற்கான திட்டத்திற்கு நிதி இல்லை எனக்கூறி, தேர்வு செய்யப்பட்டவர்களைக் காத்திருக்கச் செய்திருக்கிறார்கள்.

கல்வியில் இருந்து ஒடுக்கப்பட்டோரை வெளியேற்றுவதற்கான அத்தனைப் பணிகளையும் தந்திரமாகச் செய்துகொண்டே, வெற்று விளம்பரங்களைக் கொண்டு மக்களை மடைமாற்றிவிடலாம் என்ற பா.ஜ.க.வின் மடமைத்தனம் அம்பலமாகிக் கொண்டிருக்கிறது.

---

## ஃப்ளாஷ்பேக்



### இளைஞர் அணி காலம்!



ஆ.செந்தில் குமார்

1993-ஆம் ஆண்டு, கட்டமைப்பு ரீதியாக கழகம் நெருக்கடியைச் சந்தித்தபோது, இளைஞர் அணியை வலிமைப்படுத்தும் வகையில், அந்த ஆண்டு ஆகஸ்ட் 14 அன்று, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்களை அழைத்து வந்து, ஈரோடு நகரில் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்தோம். கூட்டத்துக்கு நான் தலைமை வகித்து உரையாற்றியபோது, எடுத்த படம் இது. அன்றைய மாநில மாணவரணி செயலாளர், இன்றைய நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா, அண்ணன் அன்பில் பொய்யாமொழி, நாமக்கல் மாவட்டச் செயலாளராக இருந்த கே.கே.வீரப்பன், அன்றைய மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எவரெஸ்ட் மு.கணேசன், தலைவருக்குப் பின்னால் கழகச் சொற்பொழிவாளர் ஈரோடு இறைவன் ஆகியோர் இடம்பெற்றுள்ள இந்தப் படம் காலப் பெட்டகம்.

– ஆ.செந்தில் குமார்,
மாவட்ட துணைச் செயலாளர், ஈரோடு தெற்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

---

## நம் வரலாறு... ம்ஊருக

## கழகம் மிரளாது!

1954-ஆம் ஆண்டு, கழகத்தின் மீது அவதூறுப் பிரச்சாரம் செய்யப்பட்டதற்கு ராயப்பேட்டையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பதிலளித்தார் பேரறிஞர் அண்ணா. 'திராவிட முன்னேற்றக் கழகம் யாருக்கும், எப்போதும் கையாளாக மாறாது. அதனிடத்திலே, சில திட்டவட்டமான கொள்கைகள் இருக்கின்றன. யார் அதை மிரட்டினாலும், மிரட்டும்போது அது மிரள்வதில்லை, ஆசை காட்டும்போது, அதிலே அது மயங்கி விடுவதுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என முழங்கினார்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.